பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

அனுபனிப்பு

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2026 கார்த்திகை 27 புதன்கிழமை (13-12-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 17

# தெற்காசியாவில் உள்ள பல்வேறு விடுதலை இயக்கங்களும் இணைந்து புதிய அமைப்பு உதயம்

## புலிகளையும் சேர்க்க முயற்சி

லண்டன், டிசம்பர். 13

தெற்காசியாவில் விடுதலைக்காகப் போராடும் அரசியல் குழுக்களுக்கு இடையில் பொது முன்னணி ஒன்றைத் தோற்றுவிக்கும் நோக்குடன் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாக அறிவிக்கப்படுகின்றது.

இந்த அமைப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளையும் சேர்த்துக் கொள்ள அதன் ஏற்பாட்டாளர்கள் முயற்சித்து வருவதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

இந்தியாவின் காஷ்மீர், பஞ்சாப், அஸாம் ஆகிய மாநிலங்களில் சுயாட்சிக்காகப் போராடும் அரசியல் குழுக்களே ஒன்றிணைந்து பொது முன்னணி ஒன்றை உருவாக்கியுள்ளன.

எதிர்காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளையும் பாகிஸ்தானின் எம்.கியூ.எம். அமைப்பையும் இணைத்து

(6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆயரின் "பேர்ஸை" 'துடைத்து வழித்த' படை!

### வவுனியாவில் சம்பவம்

சாவகச்சேரி, டிச. 13

கொழும்பில் இருந்து வடக்கு நோக்கி வந்த யாழ். ஆயர் அதி. வண. தோமஸ் சௌந்தரநாயகம் வவுனியாவுக்கு அப்பால் தமது செலவுக்கு ஒரு சதத்தைக் கூட தம்முடன் எடுத்துவர படையினர் அனுமதிக்கவில்லை என்று தெரியவருகிறது.

கடந்த சனிக்கிழமை கொழும்பில் இருந்து வாகனம் மூலம் வவுனியா வந்த யாழ். ஆயரும் அவரது செயலாளரான வண. தவராஜசிங்கமும் வவுனியா ரம்யா இல்லப் படைமுகாமில் வைத்து சோதனையிடப்பட்டனர்.

மேலிட அனுமதியின்றி ஒரு சதம் பணத்தைத் தானும் எடுத்துச் செல்ல முடியாது என அவர்களிடம் தெரிவித்த படையினர், அவர்களின் பேர்ஸில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வலிகாமத்தை படையினர் இன்னும் முற்றாகக் கைப்பற்றவில்லை

### விமானப்படை முன்னாள் அதிகாரி தகவல்

கொழும்பு, டிச. 13

வலிகாமம் பகுதி முழுவதையும் இராணுவம் இன்னும் கைப்பற்றவில்லை. வலிகாமத்தைத் துருப்புக்கள் வெறுமனே சுற்றிவளைத்துள்ளன. அவ்வளவுதான்.

விமானப் படையின் முன்னாள் விங் கொமாண்டர் மார்க் செனவிரத்னா இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

அவர் யாழ்ப்பாண நிலைமை குறித்துத் தெரிவித்ததாவது:-

வலிகாமம் கிழக்குக் கரை, வடக்குக் கரைப் பகுதிகளில் மட்டுமே இராணுவம் நிற்கின்றது. மேற்குக் கரையில் இராணுவம் இல்லை.

வலிகாமத்தை முழுவதுமாக இராணுவம் கைப்பற்றியதாகக் கூறமுடியாது. வலிகாமத்தைச் சூழவே இராணுவம் நிற்கின்றது.

ஸ்ரீலங்கா இராணுவம் மக்கள் யாவரும் வெளியேறிய ஒரு சுடுகாட்டையே கைப்பற்றியுள்ளது— என்று அவர் குறிப்பிட்டார்.

(அ-7)

## தனிக்கட்சி தொடங்க ரஜனிகாந்த் முடிவு?

### அவரது பேட்டி ஒளிபரப்பு

சென்னை, டிச. 12

"நான் அரசியலில் பிரவேசிப்பதாயின் எந்தக் கட்சியிலும் சேர மாட்டேன். தனிக் கட்சியே தொடங்குவேன்."

— இவ்வாறு அறிவித்திருக்கின்றார் நடிகர் ரஜனிகாந்த்.

நேற்று சென்னை தொலைக்காட்சியில் ஒளிபரப்பான அவரது பேட்டியிலேயே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

பேட்டியின் முதல் தொகுதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்துக்கு மக்களைக் கொண்டு வருவதில்தான் வெற்றி உள்ளது என்கிறார் சந்திரிகா

மணிலா, டிச. 13

யாழ். நகரை விட்டு வெளியேறிய மக்களை மீண்டும் யாழ். நகருக்குக் கொண்டு வருவதில் தான் தனது வெற்றி அடங்கியுள்ளது என்பதை ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஏற்றுக்கொண்டுள்ளார் என வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

யாழ்ப்பாணச் சமரில் தமது படையினர் பெருமளவில் துருப்புக்களையும், ஆயுதங்களையும் இழந்திருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

எனினும் யாழ். குடா நாட்டின் மீது திட்டமிடப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கை பெருமளவு இழப்பைச் சந்தித்தாலும் கூட தொடரும் என்றும் —

இந்தப் புதிய தாக்குதலிலும் வெற்றி பெறுவது உறுதி என்றும் அவர் கூறியதாகவும் வெரித்தாஸ் குறிப்பிட்டது.

(உ-7)

## படை நடவடிக்கையின்போது சென். பற்றிக்ஸ் பகுதியில் 4 பேர் ஷெல்லுக்குப் பலி!

### ஆயர் இல்லம், குருமனை சேதம்

சாவகச்சேரி, டிச. 13

யாழ்ப்பாணத்தில் படையினர் மேற்கொண்ட "சூரியப்பிரகாசம்" நடவடிக்கையின்போது சென். பற்றிக்ஸ் கல்லூரியில் தங்கியிருந்த நான்கு வயோதிபர்கள் ஷெல் தாக்குதல்களில் கொல்லப்பட்டதாக தற்போது தகவல் கிடைத்துள்ளது.

அந்தப் பகுதியில் படையினர் மேற்கொண்ட பீரங்கி, மற்றும் ஷெல் தாக்குதல்களினால் ஆயர் இல்லம், சென். பற்றிக்ஸ் கல்லூரி, குருமனை, ஆசனக் கோவில் உட்பட பெருமளவு கட்டடங்கள் சேதமடைந்தன என்றும் — இங்கு தகவல் கிடைத்துள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 2 கத்தோலிக்க குருமாரும் நிபந்தனையுடன் விடுவிப்பு

### கொழும்பிலேயே நிற்க வேண்டும்

சாவகச்சேரி, டிச. 13

தாண்டிக்குளம் ஊடாகவடபகுதிக்கு வர முயன்றபோது பெருந்தொகையான பணத்தை தம்முடன் எடுத்து வந்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படும் இரு கத்தோலிக்க மதகுருமாரும் தடுப்புக் காவலிலிருந்து நிபந்தனையுடன் விடுவிக்கப்பட்டனர்.

யாழ். மறை மாவட்டத்தைச் சேர்ந்த வணபிதா ஜெபநேசனும், வணபிதா [illegible] ஸ்ரீமே படையினரால் கைது செய்யப்பட்டு சுமார் ஒருமாத

(6ஆம் பக்கம் பார்க்க)

## சிறிமாவோ கொழும்பு திரும்பினார்

கொழும்பு, டிச. 13

கால் சுகவீனத்துக்கு சிகிச்சை பெறுவதற்காக கேரளா சென்றிருந்த பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா [illegible] கொழும்பு திரும்பியுள்ளார்.

(உ-6)

## வடக்கில் மூன்று அரசுகள் செயற்படுகின்றனவாம்!

### பிரதி அமைச்சர் கூறுகின்றார்

கொழும்பு, டிச. 13

"வடக்கில் மூன்று அரசுகள் செயற்படுகின்றன. ஒன்று விடுதலைப் புலிகளின் அரசு. மற்றையது அரச அதிபரின் அரசு. மூன்றாவது அரச சார்பற்ற அமைப்புக்களின் அரசு"

இப்படிக் கூறுகிறார் துறைமுகங்கள், கப்பல் துறை, புனர்வாழ்வு, புனரமைப்பு பிரதி அமைச்சர் மஹிந்த விஜயசேகரா.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நாம் வடக்குக்கு உணவு அனுப்புகிறோம். அது எவர் கைக்கு கிட்டுகிறது? என்ன

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு நிரந்தர அலுவலகம் கிளிநொச்சியில்!

## வைத்தியர் குழு ஒன்றும் சேவையில்

சாவகச்சேரி, டிச. 13

வன்னிப் பகுதிக்கு இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கு உதவ செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் நிரந்தர அலுவலகம் ஒன்று கிளிநொச்சியில் இயங்க ஆரம்பித்துள்ளது.

வன்னிப் பகுதியில் உள்ள மக்களுக்கு சேவையாற்ற கிளிநொச்சியில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் தற்காலிக வதிவிட அலுவலகம் ஒன்று ஏற்கனவே செயற்பட்டு வந்தது.

மக்களின் தேவை அதிகரித்துள்ளதால் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியுடனான அலுவலகம் ஒன்று தற்போது கிளிநொச்சியில் இயங்க ஆரம்பித்துள்ளது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் தேடுதல் பிரிவு, தகவல் பிரிவு ஆகியனவும் கிளிநொச்சியில் இயங்க ஆரம்பித்துள்ளன.

நடமாடும் சேவையும் அங்கு இயங்கும்

அனுராதபுரத்தில் இயங்கும் வதிவிட நிலையத்தின் கிளையாகவே கிளிநொச்சி அலுவலகம் செயற்படும்.

அத்துடன் வைத்தியர் குழு ஒன்றும் கிளிநொச்சியில் சேவையாற்ற ஆரம்பித்துள்ளது. (இ-3)

# வைப்பகத்துக்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ளோர்

சாவகச்சேரி, டிச. 13

கீழ்க் குறிப்பிடப்படுவோரை அடையாள ஆவணங்களுடன் நாளை காலை 10 மணிக்கு கச்சாய் வீதி சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்துக்கு வருகை தருமாறு நிதித்துறையினர் அறிவித்துள்ளனர்.

★ சின்னத்துரை சண்முகநாதன் — 41/8, செம்மணி வீதி, நல்லூர்.

★ சதாசிவம் கனகலிங்கம் — நவரட்ணம் வீதி, கோண்டாவில்.

★ நாகப்பு வேலுப்பிள்ளை — தோப்புக்காடு, காரைநகர்.

★ நடராஜா ஞானசேகரம் — தோப்புக்காடு, காரைநகர்.

★ ஜெயராணி குணபாலசிங்கம் — 91, ஏ. வி. வீதி, அரியாலை.

★ சண்முகநாதன் நவரத்தினம் — வயாவிளான் தெற்கு.

★ சுந்தரம் யோகேஸ்வரன் அல்லது சுந்தரம் நல்லைநாதன் — 21/1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

★ யு. நவரட்ணசிங்கம் — காளுவன், சுழிபுரம்.

★ கந்தசாமி செல்வரட்ணம் — ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.

★ ரேமன் அப்லோனிக்கம்மா — உயரப்புலம், ஆனைக்கோட்டை.

★ பொன்னுத்துரை இராமலிங்கம் — 96, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

★ சுப்பிரமணியம் சிவராசா — ஆலம்குளம், சண்டிலிப்பாய் வடக்கு.

★ நடேசு சுப்பிரமணியம் — ரயில் நிலைய வீதி, கோண்டாவில்.

★ கிங்ஸ்லி இராணி — 146, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்.

★ எஸ். தங்கசாமி அல்லது தங்கசாமி கங்கேஸ்வரன் — வேலணை மேற்கு,

★ திருமதி சந்திர குமாரி விஜயகுமார் அல்லது திருமதி ராசமணி பாலசிங்கம் — மணியாபதி ஒழுங்கை, கொக்குவில் மேற்கு.

★ திருமதி பரமேஸ் சதாசிவம் — ஆடியபாதம் வீதி. திருநெல்வேலி வடக்கு.

★ ஆசீர்வாதம் மரியதாசன் — 161, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

★ சுப்பிரமணியம் அருளானந்தம் — 106/4 ஏ. வி. றோட், அரியாலை.

★ சத்தியபாமா லோகேஸ்வரன் — 96, சுரேந்திரன் (இராமநாதன்) வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.

★ திருமதி டள்சி துரைராஜா — 22, மலர்மகள் வீதி, அரியாலை.

★ திருமதி பிரான்சிஸ் தஸ்னேவிஸ் (பச்சைக்கிளி செல்வம்) — 24, 3 ஆம் குறுக்குத் தெரு, பஷையூர்.

★ அருணா நாகம்மா — கலட்டி, தெல்லிப்பளை.

★ திரு. திருமதி கணபதிப்பிள்ளை குருநாதன் — 233, சட்டநாதர் வீதி, திருநெல்வேலி கிழக்கு.

★ திருமதி கெங்காதரன் விஜராயி — 101/1, செல்லர் லேன், நல்லூர்.

★ கந்தப்பிள்ளை நாகரத்தினம் — மாரிசன் கூடல், இளவாலை.

★ விசாலாட்சி கந்தசாமி — ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு.

★ திருமதி சிவபாக்கியம் நாகரத்தினம் — மாரீசன் கூடல், இளவாலை.

★ த கமலாதேவி — கரந்தன் வீதி, நீர்வேலி தெற்கு.

★ வைத்திலிங்கம் இராசையா — அருவம்பற்று, அளவெட்டி தெற்கு (உ-7)

# வண. மல்கம் ரஞ்சித் வடக்கே வர விருப்பம்

வடக்கு — கிழக்கு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் முன் முயற்சிகளில் ஈடுபடும் நோக்குடன் வடக்கே வருவதற்கு கொழும்பு பிரதி மேற்றிராணியார் மல்கம் ரஞ்சித் விருப்பம் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 5 ஆம் திகதி இரத்தினபுரி பிரிவின் புதிய ஆயராக பதவிஏற்க விருக்கும் இவர் வடக்கே வந்து விடுதலைப்புலிகள் பிரதி நிதிகளுடன் பேச்சு நடத்தி, சமாதானத் தீர்வு ஒன்றை காண ஆர்வம் கொண்டுள்ளதாகவும் —

இவர் யாழ்ப்பாணம் வருவதற்கான அனுமதியை விடுதலைப் புலிகளிடம் கோரவிருப்பதாகவும் —

யாழ். ஆயர் அலுவலக வட்டாரங்களில் இருந்து தெரியவந்தது. (உ-3)

# ஆசிரியர் நியமனம் பெறும் 53 பேர்

தென்மராட்சி, டிச. 13

கடந்த மாதம் வவுனியாவில் நடைபெற்ற ஆசிரியர் தெரிவுக்கான நேர்முகப்பரீட்சையில் யாழ். மாவட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 53 ஆசிரியர்களின் பெயர்ப் பட்டியல் யாழ். கல்வித் திணைக்களத்திற்கு வந்துள்ளது.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் நாளை மறுதினம் காலை 9 மணிக்கு வழங்கப்படும்.

கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி கல்விக் கோட்டங்களைச் சேர்ந்தவர்களின் நியமனக் கடிதங்கள் கரவெட்டி திருஇருதயக் கல்லூரியில் இயங்கும் கல்வித்திணைக்களத்தின் வலயம் II அலுவகதிலும் —

ஏனைய கல்விக் கோட்டங்களைச் சேர்ந்தவர்களின் நியமனக் கடிதங்கள் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இயங்கும் வலயம் I அலுவலகத்திலும் —

வைத்து வழங்கப்படுமென கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பந்தப்பட்டோருக்குரிய நியமனக் கடிதங்கள் வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நியமனம் பெறும் 53 பேரின் விவரம் வருமாறு;-

எஸ். பசில் (யாழ்ப்பாணம்), என். கணேசமூர்த்தி (சித்தன் கேணி), பீ. டிரஞ்சன் (வண்ணார்பண்ணை), எஸ். பொன் போஸ்கோ (தெகிவளை), எஸ். சிவகுமாரன் (தெல்லிப்பளை), எஸ். சுந்தரகுமாரி (தெல்லிப்பளை), என். குமணசிறி (கோப்பாய்).

எம். ரஞ்சினி (கோப்பாய்), கே. லங்கேசன் (அச்சுவேலி), ரீ. கோபாலகிருஷ்ணன் (புத்தூர்), என். பஞ்சலிங்கம் (உரும்பராய்), எம். பிரபாகர் (பருத்தித்துறை), எஸ். மனோகரி (புலோலி), எஸ். தேவகி (வல்வெட்டித்துறை).

கே. மதிவதனி (பருத்தித்துறை), கே. அனுஷா (கரவெட்டி), வி. சுதர்சன் (கரவெட்டி), ஆர். தமிழ்மாறன் (கரவெட்டி), எஸ். திவாகரன் (கரவெட்டி), ஆர். வாசுதேவன் (மானிப்பாய்), கே. சிவசங்கர் (சண்டிலிப்பாய்).

கே. சுரேஸ் (மானிப்பாய்), ரீ. சசிகலா (ஆனைக்கோட்டை), கே. பாரதி (சுன்னாகம்), எஸ். சிறீகுமரன் (சுன்னாகம்), கே. சிவன்சே (சுன்னாகம்), ஆர். ஜெயகுமார் (ஏழாலை).

வி. வதனி (சுன்னாகம்), எம். துஷ்யந்தி (சுன்னாகம்), எம். கலைச்செல்வி (சாவகச்சேரி), கே. சயந்தன் (மீசாலை), ஜீ. மைதிலி (சாவகச்சேரி).

எஸ். திருச்செல்வம் (சாவகச்சேரி), எல். சிறிகிருஸ்ணராஜா (மீசாலை), எஸ். தேவந்தினி (சாவகச்சேரி), என். சர்வேஸ்வரன் (சாவகச்சேரி), எஸ். சிவகுமார் (சாவகச்சேரி).

எஸ். லலிசன் (சாவகச்சேரி), என். தவேந்திரராஜா (சாவகச்சேரி), ஜீ. ஞானசக்தி (சாவகச்சேரி), எம். மகிந்தன் (சாவகச்சேரி), கே. ராம்சியா (புத்தளம்), சீ. குமுதினி (யாழ்ப்பாணம்).

பீ. ரஜனி (அராலி), வீ. குகநேசன் (சித்தன்கேணி), என். ஜெயலலிதா (சங்கானை), எஸ். லோகேஸ்வரன் (வட்டுக்கோட்டை), எ. பாஸ்கரன் (சுழிபுரம்), எஸ். சாரதாதேவி (சங்கானை), எஸ். கேசவன் (வட்டுக்கோட்டை), ஆர். செல்வகுமார் (வட்டுக்கோட்டை), ஆர். ராஜ்கரன் (கொக்குவில்), பீ. தாரணி (யாழ்ப்பாணம்).


## தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியின்

★ ஜன்ம தினம் ★

நாளை வியாழக்கிழமை (14 - 12 - 95)

மு.ப. 11 மணிக்கு விசேட பூசை நடைபெறும்

அதனைத் தொடர்ந்து அகண்ட நாம பஜனை இடம்பெறும்.

பிரசாதம் யாவருக்கும் வழங்கப்படும்.

செயலாளர்

ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம்.
பருத்தித்துறை. (சி-3142)



## யாழ். றோட்டறிக் கழகமும்

பருத்தித்துறை

ஸ்ரீ சாரதா சேவாச்சிரமமும்

இணைந்து நடத்தும்

## இலவச கண் சிகிச்சை முகாம்

இடம் :- மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை

காலம் :- இன்று 13 - 12 - 95 காலை 8 மணி

கண் சத்திர சிகிச்சைக்கு ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டவர்களின் கார்டுகளை தினமும் மாலையில் ஸ்ரீ சேவாச்சிரமத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சுவாமி சித்ரூபானந்தா

ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை. (சி-3143)



## 2 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

அன்னை மடியில்: 11-12-1931

ஆண்டவன் மடியில் 13-12-1993

திருமதி

சச்சிதானந்தம் மங்களேஸ்வரி

23-11-1995

ஆண்டு இரண்டு சென்றதம்மா ஆறவில்லை துயரம் இன்னும்
மங்களமான உன்பெயரைமங்காமல் காத்திடுவோம் என்றும்

உங்களை நினைவு கூரும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மங்களா ஸ்தாபனத்தார்.

ச. ஆனந்தகிருபன்
மங்களா அழகுச் சோலை,
சாவகச்சேரி. (39630)


# வன்னிக்குக் கிடுகுகள் வவுனியா ஊடாக வரும்?

சாவகச்சேரி, டிச. 13

குடாநாட்டிலிருந்து வன்னி மாவட்டத்துக்கு இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கு கொட்டில்களை அமைத்துக் கொடுப்பதற்குத் தேவையான கிடுகுகளை வவுனியா ஊடாக எடுத்துவர படையினர் அனுமதி வழங்கியுள்ளனர் என யாழ். ஆயர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

வன்னியில் கிடுகுகளின் விலை அதிகரித்துள்ளதுடன் தட்டுப்பாடும் நிலவுகிறது.

இதன் காரணமாக தெற்கில் இருந்துவவுனியா ஊடாக வன்னிக்கு கிடுகுகளை எடுத்து வர கோரப்பட்ட அனுமதிக்கு படையினர் அனுமதி வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)


## உடன் சந்திக்கவும்

''88/9, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்த திருமதி இராசமணி முத்துக்கிருஷ்ண பிள்ளையை அவரது மகன் தேடுகின்றார்.

இது விடயமாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபரை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் அமைந்துள்ள பணிமனையில் உடனடியாகச் சந்திக்கவும்''

(சி 3141)


## சீனி வழங்க நிபந்தனை

நூறு ரூபாவுக்கும் அதற்கு மேலும் பொருள்கள் கொள்வனவு செய்வோருக்கு அரைக் கிலோ சீனிவழங்கப்படுகிறது.

பருத்தித்துறைப் பகுதியில் உள்ள விற்பனைத் திணைக்களக் கிளைகளிலே இது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

கடந்த இருவாரகாலமாக இக்கிளைகளில் சீனி விற்பனை நிறுத்தப்பட்டிருந்தது.

தற்போது அரைக்கிலோ சீனி 20 ரூபா வீதம் வழங்கப்படுகிறது. (இ- 15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாலியிலிருந்து ஏவப்பட்ட ஷெல்லுக்கு அல்வாய்ப் பகுதியில் வயோதிபர் பலி

வடமராட்சி, டிச. 13

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்றுக் காலை 7-30 மணியளவில் வடமராட்சிப் பகுதியை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலினால் ஒருவர் இடது கை துண்டிக்கப்பட்டு, குடல் வெளியேறிய நிலையில் உயிரிழந்தார்.

அல்வாய் மாறன்புலம் பகுதியில் தோட்ட வெளியில் விழுந்து வெடித்த ஷெல்லினால் வலிகாமம் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த குமாரசாமி (வயது 70) என்ற வயோதிபரே மரணமானவராவார்.

படுகாயமடைந்தவர் ஆபத்தான நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டவேளை மரணமானார்

பிள்ளையார் பெருங்கதை விரதத்துக்காக அறுகம்புல் எடுப்பதற்காக சென்ற இடத்திலேயே இவர் ஷெல்லுக்கு பலியானார்.

அநாதரவான நிலையில் பெயர், வயது தவிர ஏனைய விவரம் எதுவும் இன்றி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவரின் சடலம் உறவினரின் வருகைக்காக ஆஸ்பத்திரி பிரேத அறையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது

(இ-173-15-80)

# வடக்கு தொண்டர் நிறுவனங்கள் மீது அரசின் கட்டுப்பாடு இறுகுகிறது

சாவகச்சேரி, டிச. 13

ஸ்ரீலங்கா அரசு விதித்து வரும் புதிய நடைமுறைகள், கெடுபிடிகள் காரணமாக வடக்குக்கான தொண்டர் நிறுவனங்களின் சேவை முழுதாக நிறுத்தப்படும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதாக சர்வதேச தொண்டர் நிறுவனப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

வடக்கில் பணி புரியும் எட்டுக்கும் மேற்பட்ட சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் வகையில் ஸ்ரீலங்கா அரசு பல்வேறு வகையான கெடுபிடிகளை பிரயோகிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நிவாரணப்பணிகளை மேற்கொள்ளத் தேவையான உணவு பொருள்களை எடுத்து வருவதற்கு தடை விதிக்கப்பட்டதன் காரணமாகவும்—

உணவு தவிர்ந்த ஏனைய நிவாரணப் பொருள்களை எடுத்து வருவதற்கான அனுமதியை பெறுவதற்கும் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள காரணத்தாலும்—

நிவாரணப் பணிகள் மற்றும் சிறுவர் போசாக்கு பணிகளுக்கு தேவையான நிதியை பணமாக எடுத்துவர விதிக்கப்பட்ட தடை காரணமாகவும்— தொண்டர் நிறுவனங்களின் செயற்பாடுகளை வடக்கில் நிறுத்த வேண்டிய நிலை உருவாகி இருப்பதாக அந்தப் பிரதிநிதி மேலும் தெரிவித்தார். (இ-3)

## கூட்டுறவு உயர்மட்டக்குழு வன்னிக்குப் பயணமானது

சாவகச்சேரி, டிச. 13

வன்னி மாவட்டத்துக்கு இடம்பெயர்ந்த கூட்டுறவு ஊழியர்கள் தொடர்பாகவும்—

இடம்பெயர்ந்த மக்களுக்கு கூட்டுறவு அமைப்புக்கள் ஆற்ற வேண்டிய பணிகள் தொடர்பாகவும்— ஆராய்வதற்காக கூட்டுறவுத்துறை உயர்மட்டக் குழு ஒன்று வன்னிக்குச் சென்றுள்ளது.

மாகாண கூட்டுறவு ஆணையாளர் சுந்தரம் டிவகலாலா, யாழ். பிராந்திய கூட்டுறவு ஆணையாளர் தி. சபாரத்தினம் மற்றும் கூட்டுறவு அதிகாரிகள் அடங்கிய குழுவே வன்னிக்குச் சென்றுள்ளது.

இடம்பெயர்ந்து வன்னிக்கு சென்றுள்ள மக்களுக்கான நிவாரண விநியோகம் உட்பட ஏனைய சேவைகளை கூட்டுறவுத் துறையினர் வழங்குவதில் உள்ள தடைகள் குறித்தும்—

இடம்பெயர்ந்து சென்றுள்ள பனை தென்னைவள கூட்டுறவு அங்கத்தவர்களுக்கு அங்குள்ள சங்கங்கள் மூலம் வேலை வாய்ப்பு வழங்கும் சாத்தியம் குறித்தும்— இக்குழுவினர் ஆராய்வார்கள். (இ-3-7)

## சிறுவர் பாதுகாப்பு நிதிய கிளைகள்

தென்மராட்சி, டிச. 13

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அலுவலகங்கள் கொடிகாமம், பளை ஆகிய இடங்களில் திறக்கப்பட்டுள்ளன.

கொடிகாமம் பிரதேச சபை கட்டடத்தில் இயங்கும் அலுவலகம் திங்கள், வெள்ளி சனி ஆகிய தினங்களிலும்—

பளை, பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவன கட்டடத்தில் இயங்கும் அலுவலகம் செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களிலும் செயற்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

## போர்க்களம் புகுவோமே!

கட்டிய வீடு மனைகளைத் துறந்து
காசு பொருள் இழந்து
பட்டியில் ஆடு மாடுகளை விட்டு
பழந் தருங் காவிழந்து
தொட்டிலிற் பிள்ளையைத் தூக்கி மனைவியின்
தோளினைப் பிடித் திருளில்
கொட்டிய மழையில் நடந்தோம் எங்கள்
கூட்டைப் பகை கொளவே.

சிங்களத் தானெங்கள் நாட்டைப் பிடித்து
சிதைத்துக் குடி கெடுத்து
பங்கப் படுத்தப் படைகளை ஏவி
பயன் என்ன காண்பானோ?
தங்கள் வலிமையைக் காட்டி ஏழைத்
தமிழரை அடிமை கொண்டு
எங்களுக்கோர்எஜ மானாகும் அவனது
எண்ணத்தில் இடி விழுமே.

சரணாலயமாய் தமிழர்க்கு இருந்த
தணிகை யாழ். நகரம்
மரணா லயமாய் ஆயது மாற்றான்
மாய்க்கும் படை எடுத்தான்
அரணாய் எம்மை அணைத்த பூமி
அன்னியன் காட் கிழாய்
வரநாம், அங்கு உயிர்கொண் டுலவி
வாழ நினைப் போமா?

பதவிகள் பறிபோய் அகதிக ளாகிப்
பாழ்படத் தான் வரினும்
உதவிகள் அற்ற அனாதைக ளாகி
உலகினில் உழன் றிடினும்
இதமுள எல்லாம் இழந்தும் வன்னியில்
ஏதிலியாய்ப் புகினும்
அதமர்கட் காளாய் அடிமைசெய் ஈழத்
தழிபட மாட்டோமே.

கொட்டும் பனிநோய் நுளம்புக் கடியால்
குலையும் நடுங்காதே
கட்டியுங் கரடும் காய்த்த முதுகை
கன்றினுங் கலங்காதே
பட்டினி வயிறு உணவுக் கேங்கிப்
பதறினும் பசிக்காதே
விட்டுப்போ என்று உடலும் நோயால்
வெருட்டினும் வாழ்வோமே.

இன்றிலை எனினும் நாளை நமதே
ஈழம் பெறும் ஆர்வம்
குன்றா நிலையில் உழைப்போம் ஒருநாள்
கூடுந் தமிழ் ஈழம்
அன்றே எங்கள் ஆவிவிட் டிடலார்
அகலின் அது தவமே
நன்றே செய்வோம் இன்றே செய்வோம்
நாம் போர்க் களம் புகுவோமே.

— தில்லைச்சிவன்

## புதிய பங்கீட்டு அட்டைகளை விரைவில் வழங்க கோரிக்கை

யாழ்ப்பாணம், டிச, 13

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து வந்த மக்களுக்கு இதுவரை புதிய பங்கீட்டு அட்டைகளை வழங்காத கிராம சேவையாளர்கள் அவற்றை உடனடியாக வழங்கி முடிக்கவேண்டும். என்று தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் கோரி உள்ளார்.

இது சம்பந்தமாக தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வலிகாமத்திலிருந்து இடம்பெயர்ந்த அனைத்து மக்களுக்கும், இரண்டாம் கட்ட நிவாரணப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. மேலும் இடம்பெயர்ந்த மக்களுக்கு மேற்படி நிவாரணப் பொருள்கள் வழங்குவதற்கு புதிய பங்கீட்டு அட்டை வழங்கும் நடவடிக்கை அனேகமான கிராம சேவையாளர் பிரிவில் முடிவுற்றுள்ளது. இருந்தும் இதுவரை பூரணமாக புதிய பங்கீட்டு அட்டை வழங்காத கிராம சேவையாளர்கள் இடம்பெயர்ந்த மக்களின் நன்மை கருதி விரைவுபடுத்தி உடனடியாக வழங்கி உதவவும்.

மேலும் மேற்படி வேலையை பூரணமாகவும், திருப்திகர

( 5 ஆம் பக்கம் பார்க்க)

# சாவின் விளிம்பில் நிற்கிறோம்; போராட்டமே எமக்கு ஒரேவழி!

## போர்க்காலக் கருத்தரங்கில் உரை

சாவகச்சேரி, டிச. 13

இன்று தமிழ் மக்களாகிய நாம் சாவின் விளிம்பில் நிற்கிறோம். நாம் எமது பிரதேசத்தை மீட்டெடுக்கபோராட்டமே ஒரே வழி. தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனுடைய காலத்தில் தமிழீழத்தை பெறவேண்டும். எமது மண்ணில் கௌரவத்துடன் வாழவேண்டும். அடிமைப்பட்டு வாழக்கூடாது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல்துறையைச் சேர்ந்த சேரமான், சரசாலை கனகன் புளியடிச் சந்தியில் நடைபெற்ற போர்க்கால கருத்தரங்கில் உரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் கூறியதாவது:-

இன்று தமிழ் மக்களாகிய எங்கள் வீட்டு முற்றத்தை, வீட்டினை சிங்களப் படைகள் எரித்து அழிப்பதுடன், மதில்கள் வேலிகள் உள்ளிட்ட உடமைகளை தீவைத்து சேதப் படுத்துகின்றன.

இந்த நிலையில் தமிழீழ மக்களாகிய நாம் எமது பிரதேசத்தை மீட்டெடுக்க போராட்டமே ஒரேவழி. சிங்கள படையானது எங்கள் பிரதேசத்தை — குடாநாட்டினை — சுற்றி பெரும் வேலி போட்டுள்ளது.

அதனை நாம் எல்லோரும் ஒன்றிணைந்து உடைத்து தகர்த்தெறியவேண்டும்.

தற்போது ஆனையிறவு, பூநகரி இராணுவத்தினர் கிளாலி நீரேரி போக்குவரத்துப் பாதையை தடுத்து நிறுத்த திட்டமிடுகின்றனர். அதன் மூலம் குடாநாட்டினை இராணுவ ஆக்கிரமிப்புக்குள்ளாக்க எண்ணுகிறது சிங்கள ஆட்சிப்பீடம்.

இம்மண்ணிலே 40 ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ்மக்கள் இறந்து இம்மண்ணை உரமேற்றியுள்ளார்கள். எனவே. நாம் போராட்டத்தில் இணைந்து மிக விரைவில் எமது விடுதலையை பெறவேண்டும். இதுவே எமது தேசியத் தலைவரின் அவா.

யாழ்ப்பாண பிரதேசத்தில் சிங்கள இராணுவம் நிலை கொண்டு நிற்கும் வரை சமாதானக் கதவுகள் பூட்டப்பட்டிருக்கும் என மாவீரர் நாள் நினைவு உரையில் தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் ஆணித்தரமாக கூறியுள்ளார்.

தற்போதைய இக்கட்டான சூழ்நிலையில் பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை இளம் ஆசிரிய, ஆசிரியைகள், இளம் கலைஞர்கள், என பலரும் போராட்டத்தில் இணைகின்றனர். எனவே இளைஞர்கள் யுவதிகள், போராட்டத்தில் இணையவேண்டும். பிள்ளைகளை பெற்றோர் தாமாகவே போராட்டத்தில் இணைத்து வருகின்றனர்.

சிங்கள அரசானது தமிழ் மக்களை அழிக்க ஆயுதங்கள் டாங்கிகள், வாகனங்கள் என எங்கள் பிரதேசத்தில் குவித்து வருகின்றது ஆனால் ஸ்ரீலங்கா இராணுவம் இங்கே அழியாபோகிறது. அதற்காகவே நாம் உங்களைப் போராட்டத்துக்கு கேட்கிறோம். காலத்துக்கு காலம் இனப்பிரச்சினை தொடர்ந்து கொண்டே இருக்கிறது. 1958ம் காலப்பகுதியில் இடம்பெற்ற இனக் கலவரக் காலத்தில் எமது தமிழீழ தேசியத் தலைவர் இருந்திருந்தால் அப்போதே தமிழீழத்தை பெற்றிருப்போம் எனவும் [illegible] தவர்கள் தற்போது கூறுகிறார்கள்.

இன்று வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள் தங்கள் நாட்டு அரசுடன் எம்மின விடுதலைக்காக குரல் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு உள்ள அக்கறை எமக்கு வேண்டும். அண்மையில் இந்தியாவில் உள்ள தமிழ் மக்கள் உணர்வு மேலிட எம் தமிழீழ மக்களுக்காக போராட்டங்களை நடத்தினார்கள்.

எனவே உலகத் தமிழர்கள் எமக்காக கொந்தளிக்கின்றனர். இவை யாவும் எமது தேசியத் தலைவரின் செயற்திறன்களால் ஏற்பட்டவை.

இன்று உலகநாடுகள் எமது போராட்டத்தை பார்த்து வியந்து நிற்கின்றன. இவ்வேளை நாம் விடுதலை பெற வேண்டும். அதுவே எமது இலட்சியம் — இப்படி அவர் கூறினார்.

இந் நிகழ்வில் பெரும் எண்ணிக்கையில் மக்கள் திரண்டிருந்தனர். வீடியோபடக் காட்சியும் காண்பிக்கப்பட்டது. கருத்தரங்கு நடைபெற்ற இடத்தில் - போராட்ட கால செயற்பாடுகளுடன் கூடிய எழுச்சிகளை, மக்களின் தற்போதைய அவல நிலைகளை, இராணுவ நடவடிக்கைகளை, அதற்கு நாம் செய்ய வேண்டிய வழிமுறைகளை காட்டும் ஓவியங்களும் வைக்கப்பட்டிருந்தன. (இ-31)

## செஞ். சங்க உறுப்பினர் சேவை

வடமராட்சி, டிச. 13

யாழ். போதனா வைத்திய சாலை, மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை ஆகியவற்றில் சிகிச்சை பெறவரும் நோயாளர்களை ஒழுங்குபடுத்துவதிலும்—

அவசர நோயாளர்களை வாகனத்தில் கொண்டு வரும் போது அவர்களை உடனடியாக சிகிச்சைப் பிரிவுக்கு எடுத்துச்செல்வதிலும்—செஞ்சிலுவைச் சங்க பருத்தித்துறை பிரிவுத் தொண்டர்கள் ஈடுபட்டுள்ளனர். (இ-173)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

பிள்ளையினார் செல்லன் ஆகிய எனது 261770830V இலக்க அடையாள அட்டையும் இரு வங்கிக் கணக்குப் புத்தகங்களும் 8-12-95 இல் சாவகச்சேரிக்கும் மீசாலைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சங்கத்தானை புத்தமுதம் வெதுப்பகத்தில் ஒப்படைக்குமாறு வேண்டுகிறேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (39495)

### இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியேற்ற

# தமிழ்க் கட்சிகளின் ஒத்துழைப்பை ஜனாதிபதி சந்திரிகா கோருகிறார்

கொழும்பு, டிச. 13

யாழ்ப்பாணத்தையும் அதன் சுற்றுப் பகுதிகளையும் சேர்ந்த இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைக்கும்—

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான தீர்வுத் திட்டத்துக்கும்— தமிழ் அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பைக் கோரி உள்ளார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

நேற்று முன்தினம் அலரி மாளிகையில் தமிழ் அரசியல் கட்சிகளுடனா சந்திப்பின் போது இந்த கோரிக்கைவிடுக்கப்பட்டது.

தற்போதைய இராணுவ நடவடிக்கை முற்றிலும் புலிகளுக்கு எதிரானது என்றும்—

அரசு எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தமிழ் மக்களையும் புலிகளைளயும் வெவ்வேறு பிரிவினராகவே இனம் கண்டு வந்ததுஎன்று ஜனாதிபதி இந்தச் சந்திப்பின் போது தமிழ் அரசியல்கட்சிகளிடம் தெரிவித்தாராம்.

அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் விரைவில்சட்ட உருவில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன் சமர்ப்பிக்கப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்தார் என்றும்—

அரசியல் தீர்வு யோசனைகள் தெரிவுக்குழு முன் சமர்ப்பிக்கப்பட்ட பின் ஆதரவு வழங்குவதாக தமிழ் அரசியல் கட்சிகள் உறுதி அளித்துள்ளன என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## ஹபரண புறப்பட்டது

பருத்தித்துறைதுறைமுகத்தில் பொருள்களை இறக்கிமுடித்த 'ஹபறண' கப்பல் 10 தபால் பொதிகளுடன் நேற்று முன்தினம் மாலை திருகோணமலை நோக்கிப்புறப் பட்டது.

இக்கப்பல் யாழ். போதனா வைத்தியசாலைக்கான மருந்துவகைகளுடன் எதிர்வரும் 17 ஆம் திகதி பருத்தித்துறைக்கு திரும்பி வரும் என தெரிவிக்கப்பட்டது.

## இடமாற்றம்

### ★ S. M. பெர்ணான்டோ ★

கண்ணாடி வழங்குபவர்கள்

இல. 4, நவீன சந்தை மேல் மாடி,
சாவகச்சேரி.

[39627]

## குழந்தைகளுக்கு பால் மா

பளைப்பிரதேசத்தில் உள்ள நலனோம்பு நிலையங்களிலதங்கியுள்ள குடும்பங்களைச் சேர்ந்த ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு வழங்குவதற்காக மனித முன்னேற்ற நடு நிலையத்தினர் லக்டோசன் பால்மா பக்கெட்டுகளை தமிழர்புனர்வாழ்வுக்கழக பளைப் பிரிவினரிடம் ஒப்படைத்தனர். (இ-117)

## வெதுப்பக ஊழியருக்கு நிவாரணம்

சாவகச்சேரி, டிச. 13

வலிகாப் பகுதியில் இயங்கிய வெதுப்பகங்களில் வேலை செய்து தற்போது இடம் பெயர்ந்துள்ள வெதுப்பக ஊழியர்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த ஊழியருக்கு நிவாரணப் பொருளாக மா, சீனி, மண்எண்ணெய், சவர்க்காரம் என்பன வழங்கப்படுகின்றன.

இந்த ஊழியர்களுக்கான நிவாரணப் பொருள்களை வடமராட்சி, தென்மராட்சி வெதுப்பக உரிமையாளர் சங்கக் கிளைகள் வழங்கி வருகின்றன.

வடமராட்சி வெதுப்பக உரிமையாளர் சங்கக்கிளை அரிசியையும் – தென்மராட்சி வெதுப்பக உரிமையாளர் சங்கக் கிளை பருப்பு, மீன்ரின், சீனி, பால்மா என்பவற்றையும் வழங்கி வருகின்றன. (இ-7)

## ரூபி நகைப் பூங்கா

இல. 111/1 (224),
கஸ்தூரியார் வீதி — யாழ்ப்பாணம்.

எமது ஸ்தாபனத்தின் கொடுக்கல் வாங்கல் உள்ள வாடிக்கையாளர்கள் கீழுள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும்

### சறோஜா தங்க மாளிகை

கண்டி வீதி — சாவகச்சேரி.

(39629)

## உடன் சந்திக்கவும்

ஆனைக்கோட்டை உயரப்புலம் வீதியில் (Churchக்கு அருகில்) உள்ள அல்பிரட் என்பவரை மானிப்பாயைச் சேர்ந்த கோபாலப்பிள்ளை பத்மாவதி என்பவர் தேடுகிறார். பின்வரும் விலாசத்தில் சந்திக்கவும்.

P. சுந்தரம்பிள்ளை
உசன்,
மிருசுவில்

(39626)

## உடன் சந்திக்கவும்

அச்சுவேலியில் வசித்து தற்சமயம் கிளிநொச்சியில் தங்கியிருக்கும் நாவலர் றோட், இலுப்பையடியைச் சேர்ந்த

லிங்கம் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்
திரு. பத்மநாதன் அவர்கள்
கடை உரிமையாளர் பத்மநாதன் [யப்பான்]

அவர்களை சாவகச்சேரி நவீன சந்தை விலாசத்தில் உடன் சந்திக்க விரும்புகிறார்.

(39501)

## மொழி பெயர்ப்பாளர் பதவி

ஆங்கிலம் — தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் உடன் தேவை. தகுதிக்கேற்ற சம்பளமும் இருப்பிட வசதியும் வழங்கப்படும். வன்னிக்கு இடம் பெயர்பவர்கள் வன்னி விலாசத்தைக் குறிப்பிடவும்.

விளம்பர இல: 504
C/O உதயன் பணிமனை,
சரசாலை.

(39498)

### நகரசபை, சாவகச்சேரி

## வரவு செலவுத் திட்டம்-1996

(255 ஆம் அத்தியாயமான) நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 1979 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 178 (3) ஆம் பிரிவின் பிரகாரம் இச்சபையால் அங்கீகரிக்கப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்ட 1996 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டம் இச் சபையில் 14-12-95 ஆம் திகதி தொடக்கம் ஏழு (7) நாட்களுக்கு அலுவலக நேரங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சி. நடராசா
செயலாளர்
நகரசபை, சாவகச்சேரி

நகரசபை அலுவலகம்
சாவகச்சேரி
12-12-95

(சி/2908)

## கஞ்சிக்குடிச்சாறு பகுதியில் குண்டு வீச்சு

கொழும்பு, டிச. 13

அம்பாறையில் கஞ்சிகுடிச்சாறில் உள்ள காட்டுப்பகுதியில் படையினர் குண்டு வீச்சுத் தாக்குதலை நேற்று முன் தினம் மேற்கொண்டதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-3)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்: 17 — 02 — 1919



மறைவு: 15 — 11 — 1995

குரும்பசிட்டி
### அமரர் P. S. நடராஜா
[கெக்கிறாவ]

15-11-95 இல் அமரரான எமது குடும்பத் தலைவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை 14-12-95 வியாழக்கிழமை எமது தற்காலிக வதிவிடமான

நுணாவில் கிழக்கு, அந்தனி வீதியில்
அமைந்துள்ள
திரு. கே. மகேஸ்வரன்

அவர்களின் இல்லத்தில் நடைபெறும் அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும்வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். தற்போதைய சூழ்நிலை காரணமாக தனித்தனி அழைப்பு அனுப்பமுடியாமைக்கு வருந்துகின்றோம்.

பிரிவால் துயருறும்
மனைவி — நாகேஸ்வரி
மகன் — ராஜன்

68, மருதடி வீதி,
நல்லூர்.

(39423)

## உடன் தொடர்பு கொள்ளவும்

தெற்கு புன்னாலைக் கட்டுவன், ஈவினையைச் சேர்ந்த ஆசிரியர் திரு. செ. செல்வரட்ணம், ப. நோ. கூ. சங்க முகாமையாளர் திரு. ஞானசூரியர் ஆகியோர் தயவுசெய்து உடன் தொடர்பு கொள்ளவும்.

திருமதி தவயோகராஜா கமலாம்பிகை
(சிவகாமசுந்தரி)
கங்காணியார் முருகன் கோவிலடி,
மீசாலை

(39502)

## முன்பள்ளி ஆசிரியர் கலந்துரையாடல்

சாவகச்சேரி, டிச. 13

சாவகச்சேரி பிரிவில் உள்ள அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களுக்குமான கலந்துரையாடல் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இதில் அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களையும் தவறாது [illegible] புனர் வாழ்வுக் கழகத்தினர் அழைத்துள்ளனர். (இ-7)

## கண்ணீர் அஞ்சலி

நுணாவில் கிழக்கைச் சேர்ந்தவரும், தென்மராட்சி பிரதேச செயலக எழுதுவினைஞருமாகிய

செல்வி இ. சிவஞானவதி அவர்களின்
அன்புத் தந்தையாராகிய

### சோ. இரத்தினசிங்கம்
அவர்கள்

13-11-1995 ஆம் திகதி சிவபதம் அடைந்ததையிட்டு அவரது குடும்பத்திற்கு எமது சங்கம் சார்பாக கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலக ஊழியர்
நலன்புரிச் சங்க அங்கத்தவர்கள்,
சாவகச்சேரி.

பிரதேச செயலகம்,
தென்மராட்சி,
சாவகச்சேரி.
13-12-1995

(சி/2909)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நிராகரிப்பு ஊர்ஜிதமே!

போர் நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வருமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை ஜனாதிபதி சந்திரிகா நிராகரித்துவிட்டார்.

சந்திரிகாவை நேற்று முன்தினம் சந்தித்த கொழும்பில் உள்ள ஒன்பது தமிழ்க் கட்சிகள் இந்தப் போர் நிறுத்தக் கோரிக்கையை விடுத்திருந்தன.

யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்த வெற்றிக்களிப்புடன் இருக்கும் வேளையில், அதனைப் பெருவெற்றியாகச் சோடித்து, சிங்கள மக்கள் மத்தியில் தன்னை ஒரு வரலாற்று நாயகியாகக் காட்டிக் கொண்டிருக்கும் வேளையில், போர் நிறுத்தம் ஒன்றைச் செய்வதற்கு சந்திரிகா முன்வருவார் என்று எவ்வாறு எதிர்பார்ப்பது?

கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகளுக்கு இது நன்றாகத் தெரியும். எனினும் தமிழ் மக்கள் மீதுள்ள அக்கறையால் தாம் இப்படி ஒரு கோரிக்கையை விடுத்ததாகக் காட்டிக் கொள்ளவே அவை சந்திரிகாவிடம் போர் நிறுத்தம் கொண்டு வருமாறு கேட்டன. 'நாங்கள் கேட்டோம்; அவர் நிராகரித்துவிட்டார்; நாம் என்ன செய்ய முடியும்' என்ற சாட்டுச் சொல்வதற்காகவே இந்த முயற்சி.

நாம் இப்பத்தியில் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல, யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்ததால் விடுதலைப் புலிகளை விட அரசாங்கம் இராணுவ பலத்தில் மேலோங்கி நிற்கிறது என்ற மமதை சந்திரிகாவிடம் பிறந்துள்ளது.

இராணுவ வெற்றியில் ஒரு முறை ருசி கண்டுவிட்டார். அதனால் தொடர்ந்தும் அதனை ருசிக்க விரும்புகிறார்! அதாவது தமது மேலோங்கிய நிலையை மேம்படுத்த விரும்புகிறார்.

தாம் தொடர்ந்தும் இராணுவ ரீதியாக மேலோங்கிய நிலையில் இருந்தால் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் கொண்டுவர வேண்டிய தேவையே இருக்காது என்பது அவரது அரசியல் கணக்கு.

வெளி உலகத்தை ஏமாற்றுவதற்காக அரசியல் தீர்வு தான் தமது தளராத நிலைப்பாடு என்றுகூறிக்கொண்டே-

செயலளவில் அது விடயத்தில் அக்கறை கொள்ளாது சில கண்துடைப்பு நடவடிக்கைகளை மட்டும் வெறுமனே தொட்டுக் காட்டிக் கொண்டே —

தமது பதவிக் காலத்தைத் தக்க வைப்பது சந்திரிகாவின் நோக்கம்.

அதனால்தான் —

எவருடனும் போராட நாம் விரும்பவில்லை என்று கூறிக்கொண்டே வடக்கிலும் கிழக்கிலும் இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடத்துவதற்கு அவர் உத்தரவிட்டுள்ளார்.

சூரியப்பிரகாசம் இராணுவ நடவடிக்கையின் முதலாவது கட்டமே பூர்த்தியாகி உள்ளதாகக் கூறப்படுவதும், இரண்டாவது கட்டம் விரைவில் தொடங்கப்படும் என்று அனுருத்த முதல் படை அதிகாரிகள் வரை கூறுவதும் —

கிழக்கில் பெரும் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருப்பதும் —

சந்திரிகாவின் அந்த நோக்கத்தையே புலப்படுத்துகின்றன. அதற்கும் மேலாக, போர் நிறுத்தம் செய்யுமாறு தமிழ்க் கட்சிகள் விடுத்த கோரிக்கையை நிராகரித்தமை சந்திரிகாவின் நோக்கத்தை சந்தேகத்துக்கு இடமின்றி ஊர்ஜிதம் செய்கின்றது.

# இனப்படுகொலையை தடுக்க ஐ.நா. உதவிட வேண்டும்

## தமிழர் ஆசிரியர் சங்கம் மகஜர்

சாவகச்சேரி, டிச. 13

ஸ்ரீலங்கா அரசு தமிழர்கள் மீது நடத்தும் இனப்படுகொலையை நிறுத்தவும் —

ஐ நாவின் அடிப்படை மனித உரிமைகள் தமிழினத்திற்குக் கிடைக்கவும் —

உதவுமாறு அகில இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. த. மகாசிவம், ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் திரு. பூட்ரஸ் பூட்ரஸ் காலிக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் கேட்டுள்ளார்.

இலங்கை அரசும், அரச படைகளும் எந்தெந்த வகைகளில் ஐ. நா. மனித உரிமைகள் சாசனத்தில் உறுதியளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளை மீறுகின்றன என்பது குறித்த விவரமான ஒரு பட்டியலையும் —

போர் தொடர்பான சர்வதேச சட்ட விதிமுறைகளை எவ்வாறெல்லாம் இலங்கை அரசும், அதன் படைகளும் மீறுகின்றன என்பது குறித்த ஒரு பட்டியலையும் —

இலங்கை அரசும், அரச படைகளும் நடத்தும் யுத்தத்தை தமிழர் இன அழிப்புக்கான நடவடிக்கை எனக் கருதுவதற்கான காரணங்கள் அடங்கிய பட்டியலையும் —

திரு. மகாசிவம் தமது கடிதத்தின் இணைப்புகளாகச் சேர்ந்து அனுப்பியுள்ளார்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

11-11-1995ஆம் திகதி சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் அலுவலகத்தில் கூடிய இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செயலவை பின்வரும் தீர்மானத்தை தங்களின் மேலான கவனத்திற்கு சமர்ப்பித்து, நடவடிக்கை எடுக்குமாறு தங்களைக் கோருவதென ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கையில் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழர்கள் மீது இலங்கை அரசும், அதன் ஆயுதப் படைகளும் சர்வதேச போர் விதிமுறைகளை மீறும் பாரிய போர் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்றன; ஐ. நாவின் அடிப்படை மனித உரிமைகள் சாசனத்தின் உறுதியளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளை பாரியளவில் மீறி வருகின்றன: தமிழினத்தை முற்றாக அழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. இதனை ஆழ்ந்து அவதானித்த இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் செயலவை இவ்விடயத்தை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தினதும், ஏனைய உலகத் தலைவர்களினதும், சகல சர்வதேச தொழிற் சங்கங்களினதும் சம்மேளங்களினதும் கவனத்திற்குச் சமர்ப்பித்து அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டும், தமிழர் மீதான இன ஒழிப்பு நடவடிக்கையைத் தடுத்து நிறுத்தும் பொருட்டும், போரை நிறுத்தி— யாழ். மணணில் இருந்து இராணுவத்தை விலக்கி— விடுதலைப் போராட்டத்தில் முனைப்புடன் ஈடுபட்டிருக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு—அரசியல் தீர்வு காணும்படி இலங்கை அரசை வற்புறுத்தும் படியும் கோருகின்றது.

இவ்விடயத்தில் தங்கள் பதவியின் அந்தஸ்தை ஆக்கபூர்வமாக உபயோகித்து இனப்படுகொலையை நிறுத்தவும், ஐ.நாவின் அடிப்படை மனித உரிமைகள் இப்பகுதியில் வாழும் தமிழ் இனத்திற்கும் கிடைக்க ஆவன செய்வீர்களெனவும் எதிர்பார்க்கின்றேன்.— என்று அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சந்திரிகாவை விமர்சிக்கும் இந்தியப் பத்திரிகைகள்

கொழும்பு, டிச. 13

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண முயலும் ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை இந்தியாவிலிருந்து வெளியாகும்பல பத்திரிகைகள் கடுமையாக விமர்சித்துள்ளன.

இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணும் சந்திரிகாவின் திட்டம் எந்த அளவுக்குவெற்றியளிக்கப்போகின்றது என்பது குறித்து 'பயணியர்' என்ற நாளேடு கேள்வி எழுப்பி உள்ளது.

யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றினாலும் அங்கு சமாதானம் ஏற்படாது என்றும் அந்த நாளேடு தெரிவித்துள்ளது. (இ-7)

# இலங்கைப் பிரச்சினையில் ராவ் தலையிடவேண்டும்

## குமரி அனந்தன் கோரிக்கை

சென்னை, டிச. 13

''இலங்கையும், இந்தியாவும் கொமன்வெல்த் அமைப்பில் அங்கத்துவ நாடுகளாக இருப்பதால் இலங்கைப் பிரச்சினையில் இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் தலையிடவேண்டும்.''

இப்படி தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் குமரி அனந்தன் கேட்டுள்ளார்.

இலங்கையில் அப்பாவி மக்கள் கொல்லப்படுகிறார்கள். அவர்களுக்காக நாம் குரல் கொடுக்கவேண்டும்.

இந்தப் பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண நரசிம்மராவ் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.— என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (இ-3)

# இடம்பெயர்ந்தோருக்கு கூடாரங்கள், விளக்குகள்

## யுனிசெவ் நிறுவனம் வழங்கியது

கொழும்பு, டிச. 13

வலிகாமம் பகுதியில் இடம்பெயர்ந்த மக்கள் தங்குவதற்கு வேண்டிய கூடாரம் அமைக்கும் ''கன்வஸ்'' படங்குகளை யுனிசெவ் நிறுவனம் வழங்கியுள்ளது.

அத்துடன் 2 ஆயிரத்து 500 அரிக்கேன் லாந்தர்கள், 2 ஆயிரத்து 600 பாய்கள், மலசல கூட ''கொமட்'' என்பவற்றையும் யுனிசெவ் நிறுவனம் வழங்கியுள்ளது

இந்தப் பொருள்களை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்வதற்கான அனுமதி பாதுகாப்பு அமைச்சிடம் கோரப்பட்டிருப்பதாகவும்—

அனுமதி கிடைத்ததும் ''மாஹோ'' கப்பலில் அவற்றை ஏற்றிச் செல்ல ஏற்பாடு செய்யப்படும் என்றும் கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்தது. (ஐ)

# மகனைப் போராட்டத்தில் இணைத்தார் தந்தை

செம்பியன்பற்று, டிச. 13

தமிழீழத் தேசியத் தலைவரின் மாவீரர் நாள் அறை கூவலைத் தொடர்ந்து வடமராட்சி கிழக்கு மணற்காட்டில் தந்தை ஒருவர் தனது மகனை மண் மீட்புப் போரில் இணைத்தார்.

கடந்த ஞாயிறன்று நாகர் கோவிலில் உள்ள புதிய போராளிகள் இணையும் செயலகத்தில் இது இடம் பெற்றது.

வேதநாயகம் செபஸ்தியாம்பிள்ளை என்பவரே தனது மகனை மண் மீட்புப் போரில் இணைத்தவர் ஆவார்.

தனது 16 வயது மகனான றொபின் அருள்சீலன் (சதீஸ் — வயது 16) என்பவரை அழைத்து வந்து புதிய போராளிகள் இணையும் செயலகத்தில் அவர் ஒப்படைத்தார்.

''இந்த மண்ணுக்காக நாம் அயராது உழைக்க வேண்டும். அப்போதுதான் நாம் எல்லோரும் சுதந்திரக் காற்றை சுவாசிக்க முடியும்'' என்று அவர் கூறினார்.

தமது மகன்மாரில் ஒருவர் கிளாலியில் கொலையுண்டார் என்றும் அவர் கூறினார். (இ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதவை, பேரவை கூட்டங்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மூதவை மற்றும் பேரவைக் கூட்டங்கள் நாளை வியாழக்கிழமை முறையே காலை 9.00 மணிக்கும் பிற்பகல் 2.00 மணிக்கும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமென துணைவேந்தர் அறிவித்துள்ளார். (உ)

# செஞ்சிலுவை தகவல் நிலையம் பளையிலும்

சாவகச்சேரி, டிச. 13

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் தகவல் நிலையம் பளையிலும் செயற்பட ஆரம்பித்துள்ளது.

பளையில் செயற்படும் அலுவலகத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் —

மீசாலையில் இயங்கும் அலுவலகத்தில் திங்கள், வியாழன் ஆகிய நாள்களிலும் — தகவல்களை வழங்கலாம் என செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரி தெரிவித்தார்.

அலுவலக நாட்களில் பருத்தித்துறையில் உள்ள அலுவலகத்தில் தகவல்களை வழங்கலாம் என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

# கூரை சீற் கழற்றியவர் விழுந்து காயம்

மந்திகை, டிச. 13

வீட்டின் கூரை மீது இருந்து கூரை ''சீற்'' கழற்றிக் கொண்டிருந்தவர், தவறி விழுந்து படுகாயமடைந்தார்.

பளையில் நேற்று இடம் பெற்ற இச் சம்பவத்தில் இளவாலையில் இருந்து இடம் பெயர்ந்து அல்லிப்பளையில் வசிக்கும் பொனுபாஸ் யோசவ் (வயது 50) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மந்திகை வைத்தியசாலைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார். (இ-15)

# வயிற்றோட்ட நோய் இன்னும் பரவுகிறது

சாவகச்சேரி, டிச. 13

சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு வரும் நோயாளர்களில் வயிற்றோட்ட நோயால் பாதிக்கப்பட்டவர்களே அதிகம் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த திங்கட்கிழமை மட்டும் சாவகச்சேரி ஆஸ்பத்திரி வெளி நோயாளர் பிரிவில் 77 பேர் வயிற்றோட்டத்துக்கு சிகிச்சை பெற்றுள்ளனர்.

வயிற்றோட்டத்தால் பாதிக்கப்படுவோரில் பெரும்பாலானோர் சிறுவர்களே என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-13)

# லங்கா முடித்த ஞாயிறன்று வருகின்றது

சாவகச்சேரி, டிச. 13

திருகோணமலையில் இருந்து நாளை பருத்தித் துறை நோக்கி புறப்படும் 'லங்கா முடித்த' கப்பல் ஞாயிற்றுக்கிழமை பருத்தித் துறைக்கு வந்துசேரும் என தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் இருந்து ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி, 200 மெற்றிக் தொன் சீனி, 200 மெற்றிக் தொன் பருப்பு, 50 மெற்றிக் தொன் பால்மா, ஆகியவற்றுடன் திருகோணமலை வந்து சேர்ந்த இக்கப்பலில் ஆயிரம் மெற்றிக் தொன் மா அங்கு ஏற்றப் படுவதாகவும் தெரிவிக்கப் பட்டது. (இ-3-15-173)

## புதிய பங்கீட்டு..

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாகவும், விரைவாகவும் செயற்படுத்துவதை எதிர் பார்க்கிறோம்.

மேற்படி நடவடிக்கைக்கு ஏதாவது தடங்கல் இருக்குமாயின் தமிழீழ நிர்வாக சேவையுடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டிக் கொள்கின்றோம். (இ)

# ஆஸ்பத்திரிகளில் பனடோல் இல்லை

மந்திகை, டிச. 13

மந்திகை அரசினர் வைத்தியசாலையிலும், அங்கு இயங்கிவரும் யாழ். போதனா வைத்தியசாலையிலும் சில மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.

முக்கியமாக சாதரணமாக கிடைக்கக் கூடிய பனடோல் முடிவடைந்துள்ளது.

வெளிநோயாளர் பகுதியில் சிகிச்சைக்காகச் செல்லும் நோயாளர் பலர் பனடோலை வெளியில் வாங்கும்படி பணிக்கப்படுகின்றனர். (இ-15)

## செனி. பற்றிக்ஸ்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ளது.

கடந்த 5 ஆம் திகதி யாழ். நகரில் சிங்கக்கொடியேற்றும் நிகழ்ச்சியை ஒட்டி இளவாலை தேவாலயம் ஒன்றில் இடம்பெற்ற மதவைபவத்தை நடத்தி வைப்பதற்காக தெற்கிலிருந்து சிங்கள கத்தோலிக்க மதகுரு ஒருவர் படையினரால் அங்கு கூட்டிச் செல்லப்பட்டதாகவும் —

அவர் யாழ். ஆயர் இல்லப் பகுதிக்குச் சென்று பார்வையிட்டதாகவும் —

அவர் மூலமே மேற்படி தகவல்கள் வெளியானதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## தனிக்கட்சி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று ஒளிபரப்பானது. மற்றைய பகுதி இன்று ஒளிபரப்பாகவுள்ளது.

இந்தப் பேட்டியில் —

தாம் தனிக்கட்சி தொடங்கி அரசியலில் ஈடுபடப் போவதை ரஜனிகாந்த் பூடகமாக வெளியிட்டார்.

அவர் தனிக்கட்சி தொடங்கி, காங்கிரஸ் கட்சியுடன் கூட்ணிவைத்துக்கொள்வார் என்பது இப்பேட்டியில் ஓரளவு புலனாகியதாக அவதானிகள் குறிப்பிட்டனர்.

பிரதமர் நரசிம்மராவின் பொருளாதாரக் கொள்கைகளை அவர் புகழ்ந்தார்.

நரசிம்மராவை அண்மையில் தாம் சந்தித்துப் பேச்சு நடத்தியது மரியாதை நிமித்தமான ஒன்றல்ல; அதற்கு மேல் அதில் அதிக அர்த்தங்கள் பொதிந்துள்ளன — என்றார் ரஜனிகாந்த்.

இன்று ஒளிபரப்பாகும் பேட்டியில் முக்கியமான பல தகவல்களை அவர் வெளியிடக்கூடும் என எதிர் பார்க்கப்படுகின்றது. (உ)

## 2 கத்தோலிக்க..,

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை கொழும்பில் பல்வேறு உயர்மட்டங்களுடனும் தொடர்பு கொண்டு எடுத்த முயற்சிகளை அடுத்தே இவர்கள் இருவரும் கடந்த ஆறாம் திகதியன்று விடுவிக்கப்பட்டதாக அறிய வந்தது.

இவர்கள் இருவரும் மாஜிஸ்திரேட் ஒருவர் முன்னால் ஆஜர் செய்யப்பட்டு, கொழும்புக்கு வெளியே செல்லக்கூடாது என்ற நிபந்தனையுடன் விடுவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-173)

## யாழ். ஆயரின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த முழுப்பணத்தையும் ''துடைத்து வழித்து'' தனியாக எடுத்து வைத்தனராம்.

இதனையடுத்து வேறு வழியின்றி வவுனியாவில் இருந்த கத்தோலிக்க குரு நிலையம் ஒன்றுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அங்கிருந்த சிலரை அழைத்து தம்மிடமிருந்த அனைத்துப் பணத்தையும் அவர்களிடம் ஒப்படைத்து விட்டு வழிச் செலவுக்கும் காசின்றி வெறுங்கையுடன் வடக்கு நோக்கிப் புறப்பட்டனர் யாழ். ஆயரும் அவரது செயலாளரும்.

ஒரு தொகை பணத்தை வடக்கே எடுத்து வருவதற்கு படை உயர் பீடத்திடம் அனுமதி கோரும் விண்ணப்பம் ஒன்றையும் அவர்கள் நிரப்பி அங்கு ஒப்படைத்துவிட்டு வந்ததாகவும் தெரிய வந்தது. (உ-3)


## பாவித்த மரங்கள் தேவை

கொட்டகைகள் அமைப்பதற்குத் தேவையான மரங்கள், பனம் சலாகைகள் பல அளவுகளிலும் தேவைப்படுகின்றன.

விவரங்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

★ உதயன் பணிமனை,
பருத்தித்துறை வீதி,
(கனகம்புளியடிச் சந்திக்கு சமீபமாக)
சரசாலை.

★ வி. சோமசுந்தரம்.
பருத்தித்துறை வீதி,
கொடிகாமம் (சந்தி)



## சேரன் பல்பொருள் வாணிபம்
## அறிவித்தல்

எமது நிறுவனத்தில்
கடன் நிலுவையுள்ள வாடிக்கையாளர்கள்
**20 – 12 – 95** ஆம் திகதிக்கு முன்
சாவகச்சேரி, தபாற்கந்தோர் வீதியிலுள்ள
எமது பணிமனைக்கு

சமுகம் தந்து, தமது நிலுவைகளைச் செவ்வை பார்க்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

நிர்வாகம்,
சேரன் பல்பொருள் வாணிபம்

(39505)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 13-12-95 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# யாழ் நகருக்கு சிமெந்து

கொழும்பு, டிச. 13

படையினரால் மீட்கப்பட்ட யாழ்ப்பாணத்தில் புனரமைப்பு பணியை மேற்கொள்ள 10 ஆயிரம் சிமெந்து பக்கெட், 10 ஆயிரம் கூரைத் தகடுகள மற்றும் கட்டடப் பொருள்கள் இவ் வார இறுதியில் அங்கு அனுப்பி வைக்கப் படவிருக்கின்றன.

அத்துடன் அங்கு புனரமைப்பு பணிக்கான தொழிலாளர்களும் தெற்கில் இருந்து அனுப்பப்படவிருக்கின்றனர்.

—இவ்வாறு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் புத்தி ஸ்ரீவர்த்தனா தெரிவித்துள்ளார். (உ-3)

# மருந்துகள் வந்தன

சாவகச்சேரி, டிச. 13

யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்துக்கு 'ஹபரண' கப்பலில் எடுத்து வரப்பட்ட நாலாம் காலாண்டுக்கான மருந்து வகைகளில் விசர் நாய்க்கடி நோய்க்கு எதிரான மருந்தும் அடங்கியுள்ளது.

இவற்றை 500 பேருக்கு வழங்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பாம்புக் கடியால் பாதிப்புறுவோருக்கு கொடுக்கும் மருந்தும் பருத்தித்துறை வைத்தியசாலைக்கு எடுத்துவரப் பட்டுள்ளது (உ-7)

# பாண் உற்பத்தி

சாவகச்சேரி, டிச.13

தற்போது தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளில் உள்ள வெதுப்பகங்களில் தினமும் ஒரு லட்சத்து 20 ஆயிரம் இறாத்தல் பாண் உற்பத்தி செய்யப்படுவதாக யாழ் மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கத்தலைவர் திரு. சிவசுப்பிரமணியம் தெரிவித்தார்.

இது முன்னைய உற்பத்தியை விட மூன்று மடங்கு அதிகம் என்றும் அவர் கூறினார். ]இ-7)

## வடக்கில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடக்கிறது?— என்பது பற்றி எம்மால் திடமாகக் கூற முடியாது.

எமது எதிரிகளுக்கும் நாம் உணவு அனுப்புகிறோம் எனக் குறிப்பிடப்படுகிறது. எதிரிகளுக்கும் உணவு அனுப்பும் நாடு உலகத்தில் இலங்கை தான் — என்று அவர் கூறினார். (உ-3)

## பல்வேறு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இம் முன்னணியை விரிவுபடுத்த தாங்கள் முயற்சிக்கப் போவதாகவும் அக்குழுக்கள் அறிவித்துள்ளன.

அஸாமின் கோவாஹாட்டி நகரில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் மேற்படி அரசியல் குழுக்களின் தலைவர்கள் இது பற்றிய அறிவிப்பை விடுத்தனர்.

தெற்காசியாவில் இடம் பெற்று வரும் சுயநிர்ணய உரிமைப் போராட்டங்களை தாபன மயப்படுத்தும் நோக்குடன் தாங்கள் ஒன்று கூடி ஆராய்ந்து வருவதாகவும் அவர்கள் அறிவித்தனர்.

''இந்தியாவும் ஏனைய தெற்காசிய நாடுகளும் இனப் போராட்டங்களை தொடர்ந்தும் சட்டம் — ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டிய பூசல்களாகக் கருதி செயற்படக் கூடாது அப் போராட்டங்களுக்கு அரசியல் தீர்வுகளைக் காண முயற்சிக்க வேண்டும்.' — என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

''பிரிந்து போவதற்கான ஆயுதப் போராட்டங்களை எமது அமைப்பு ஆதரிக்கின்றது. பயங்கரவாதத்திற்கு எமது அமைப்பு எதிரானது' — என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (உ-[illegible])

# சாவகச்சேரியில் கிளினிக் தினங்கள்

தென்மராட்சி, டிச. 13

யாழ். போதனா வைத்தியசாலையில் நடைபெற்ற கிளினிக்குகள் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நடத்தப்படும் என பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் க. தா. சிவபாதம் தெரிவித்தார்.

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலைக்கு பெருமளவு நோயாளர்கள் வருவதால் அங்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனைத் தவிர்ப்பதற்கு தென்மராட்சியின் சரசாலை, மந்துவில். வரணி போன்ற இடங்களில் உள்ளவர்கள் மந்திகை வைத்தியசாலைக்குச் சென்று ஒத்துழைக்குமாறும் அவர் கோரியுள்ளார்.

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் கிளினிக்குகள் நடத்தப்படும் தினங்கள் வருமாறு:-

- ★ திங்கள் — சலரோகம்
- ★ செவ்வாய் — பொது மருத்துவம்
- ★ புதன் — குழந்தைகளுக்கான சிகிச்சை
- ★ வியாழன் — மனநோய்
- ★ வெள்ளி — காலையில் — கர்ப்பவதிகள்
  மாலையில்— மனநோய்
- ★ சனி — குழந்தைகளுக்கான தடுப்பூசி

கண்சிகிச்சை வழமைபோல் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் நடைபெறும். (உ-117)

# மரண அறிவித்தல்கள்

## சிவநாதன் இரத்தினேஸ்வரி

கோண்டாவில் 4 ஆம் கட்டை கே. கே. எஸ். வீதியைச் சேர்ந்த திருமதி இரத்தினேஸ்வரி (12 - 12 - 95) நேற்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற துரைச்சாமி - திலகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், சிவநாதனின் (இ. போ. ச சாரதி) அன்பு மனைவியும், தயாபரன் (அனுஷா பந்தல் சேவை), அனுஷா, றஜீபன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், கிருபாகரமூர்த்தி, இராமமூர்த்தி ஆகியோரின் சகோதரியும், கி. புனிதவதி, இ. கனகாம்பிகை ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சரசாலை வடக்கு முத்துமாரியம்மன் கோவிலடியில் உள்ள அன்னாரது தற்காலிக வதிவிடத்தில் இன்று (13 - 12 – 95) பி. ப. 3.00 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கிருபா பந்தல் சேவையினர்
இணுவில்

சரசாலை வடக்கு,
சரசாலை.

(395C7)

## குழந்தைவேலு செல்லம்மா

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லம்மா காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற குழந்தைவேலுவின் அன்பு மனைவியும், தவராஜேஸ்வரி, தவராசசிங்கம் (குலம், நித்தியலட்சுமி மரக்காலை - தட்டாதெரு), தனபாலசிங்கம் (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சற்குணநாதன், சாந்தினி, புனிதராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், இந்திரஜித், லக்ஷனா, செந்தீசன், ஜீவணா, வாகீசன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் நேற்று (12-12-95) சாவகச்சேரி இந்து மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
கு. தவராசசிங்கம்
(குலம்)

அரசநாதன்
கண்டுவில் லேன்,
சாவகச்சேரி.

(39506)

## கந்தையா நடராசா

[ஓய்வு பெற்ற மாநகரசபை ஊழியர்]

வண்ணார் பண்ணையைச் சேர்ந்த கந்தையா நடராசா (12- 12- 95) அன்று காலமானார்.

இவர் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், ஜெகதாம்பாள் [சுவிஸ்] விஜயலட்சுமி, துரைசிங்கம் (சுவிஸ்) தில்லைநாயகி [ஜேர்மனி], இந்திராதேவி [சுவிஸ்], ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ் சென்ற கிருஸ்ண பிள்ளை, நாகரத்தினம் (சின்னராசா), சிவசுப்பிரமணிமம் [ஜேர்மனி], அருளானந்தம் [சுவிஸ்], புவனேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும்,

காலஞ் சென்ற குருசாமி — பொன்னம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ் சென்றவர்களான நாகரத்தினம், இராசையா மற்றும் முத்துவேலு விசுவலிங்கம், இராசம்மா ஆகியோரின் சகோதரரும் ராஜ்மோகன் [சுவிஸ்], ரஞ்சினி (பெர்லின்), ஜெயந்தினி [சுவிஸ்], ரவீந்திரன் (பொறியியல் பீடம், பேராதனை பல்கலைக் கழகம்), சுதாகரன் [லண்டன்], பிரபாகரன் (லண்டன்) பிரதீபன் (கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன்) கௌரி [கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவி], கவிதா, விஜிதா, துளசி, குருபரன், ரஜீவா, ராஜன், எல்சி, ஜென்சி, போசியா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நுணாவில் காந்தாளம் பிட்டி மயானத்தில் நேற்று (12- 12- 95) பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. நாகரத்தினம்
(மருமகன்)

வீரபத்திரர் வீதி
நுணாவில் மேற்கு,
நுணாவில்.

(39628)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org